சிறப்பு சேவைகள் மற்றும் கட்டுரைகள்

# நாடு தழுவிய டிஜிட்டல் ஓய்வூதிய அதாலத்

இடுகை இடப்பட்ட நாள்: 30 MAR 2022 4:27PM by PIB Chennai

DoT & BSNL ஓய்வூதியதாரர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நாடு தழுவிய ஓய்வூதிய டிஜிட்டல் அதாலத் 23.03.2022 அன்று 1100 மணி முதல் 1300 மணி வரை சென்னை, எத்திராஜ் சாலை கட்டிடம், TNT வளாகத்தில் உள்ள அரங்கில் நடைபெற்றது.

நாடு முழுவதும் நடத்தப்பட்ட மெய்நிகர் கூட்டத்தை, மாண்புமிகு செயலாளர் (தொலைத்தொடர்பு) மற்றும் தலைவர், டிஜிட்டல் கம்யூனிகேஷன்ஸ் கமிஷன், புது தில்லி ஸ்ரீ கே.ராஜாராமன் தொடங்கி வைத்தார். ஓய்வூதியர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக "ஓய்வூதியம் பெறுவோரின் மகிழ்ச்சி" என்ற முழக்கத்துடன், திரு. திலீப் பாத்யே  உறுப்பினர் (நிதி) முன்னிலையில், தொடர்பு கணக்குகளின் கட்டுப்பாட்டாளர் ஜெனரலால் அதாலத் ஏற்பாடு செய்யப்பட்டது. செயலாளர் (தொலைத்தொடர்பு) தனது தொடக்க உரையில், ஓய்வூதியம் பெறுவோர் எதிர்கொள்ளும் இன்னல்களைக் குறைக்க முன்னுரிமை அடிப்படையில் மற்றும் நெகிழ்வான முறையில் குறைகளை தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்தினார்.

DoT இன் 28 களப் பிரிவுகளில் ஒன்றான சென்னை, தகவல் தொடர்பு கணக்குகளின் முதன்மைக் கட்டுப்பாட்டாளர் அலுவலகம், ஓய்வூதியம் பெறுவோரைச் சென்றடைவதிலும், அவர்களின் குறைகளை காலாண்டு அடிப்படையில் அதாலத் நடத்துவதன் மூலம் சரிசெய்வதிலும் இந்த சிறப்பு முயற்சியை மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு வட்டத்தின் தகவல் தொடர்பு கணக்குகளின் முதன்மைக் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தின் 23/03/2022 அன்று நடைபெற்ற ஓய்வூதிய அதாலத், தகவல் தொடர்பு கணக்குகளின் முதன்மைக் கட்டுப்பாட்டாளர் டாக்டர் நிரஞ்சனா மற்றும் தகவல் தொடர்பு கணக்குகளின் கட்டுப்பாட்டாளர் ஸ்ரீ.சித்தரஞ்சன் பிரதான் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

அதாலத்தில் பங்கேற்பதற்கான இணைப்பு தனிப்பட்ட ஓய்வூதியதாரர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் மின்னஞ்சல் மூலம் பகிரப்பட்டது. ஓய்வூதியர் சங்கங்களின் ஆறு பிரதிநிதிகள் மற்றும் 28 தனிப்பட்ட ஓய்வூதியதாரர்கள் மெய்நிகர் முறையில் அதாலத்தில் பங்கேற்றனர்.

அதாலத்தில், தமிழ்நாடு வட்டத் தொடர்புக் கணக்குகளின் முதன்மைக் கட்டுப்பாட்டாளர் அலுவலகம், பிஎஸ்என்எல் பிரிவுகள் மற்றும் பொது மேலாளர் அலுவலக (அஞ்சல் கணக்குகள் மற்றும் நிதி), வங்கிகளின் மத்திய ஓய்வூதிய செயலாக்க மையங்கள் இந்த அலுவலகங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். தொடர்பு கணக்குகளின் கூட்டுக் கட்டுப்பாட்டாளர் அதாலத்தில் பெறப்பட்ட குறைகளை ஒவ்வொன்றாக நிவர்த்தி செய்தார். அதாலத்தில் பங்கேற்ற ஓய்வூதியதாரர்கள் திருப்தி அடையும் வகையில் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மெய்நிகர் அதாலத்துக்கு மொத்தம் 124 எண்ணிக்கையிலான புகார்கள் பெறப்பட்டன, அவற்றில் 120 தீர்க்கப்பட்டன, அதாவது 97% குறைகள் தீர்க்கப்பட்டன. மீதமுள்ள புகார்களும் நான்கு வாரங்களுக்குள் தீர்க்கப்படும் என தமிழ்நாடு வட்ட தொலைத் தொடர்பு கணக்குகள் பிரிவு, முதன்மை கட்டுப்பாட்டாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

-----

(வெளியீட்டு அடையாள எண்: 1811492) வருகையாளர் எண்ணிக்கை : 40

இந்த வெளியீட்டை படிக்க: English